முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாதவரம் தெற்கு பகுதி 32வது வட்ட திமுக சார்பில் 1000 பேருக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட பிரதிநிதி தேவி கௌதமன், கௌதம் பாலாஜி ஆகியோர் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் ஜி.துக்காராம், எஸ். நந்தகோபால், எம். சரவ ணன், புத்தகரம் இ.ஏழு மலை ஆகியோர் முன்னிலை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்ச னம் எம்.எல்.ஏ. சிறப்பு உணவு வழங்கினார். உடன் சிவில் எம்.செல்வம், எஸ்.என். கோதண்டன், கே. பத்மநாபன், ஆர். தேவன், எஸ்.ஹேமாவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காசநோய் துறையில் சிறப்பாகப் பணியாற்றிய - மருத்துவர்கள் - பணியாளர்களுக்குச் சான்றிதழ்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி பேச்சு!

சென்னை, மார்ச் 27 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சென்னையில் "உலக காசநோய் தினம் 2025" நிகழ்ச்சியில் 100 நாட்கள் காசநோய் இல்லா தமிழ் நாடு தொடர் பிரச்சாரம் நடைபெற்று முடிந்த நிலையில் தமிழ்நாடு அதிக பரிசோதனை செய்ததற்காக ஒன்றிய அரசின் விருதினை 24.03.2025 அன்று பெற்றது. அந்த விருதினை அமைச்சரிடம் தேசிய நலவாழ்வு குழு இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். பின் காசநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோக்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டினார்கள். பிறகு காசநோய் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு நினைவு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி விழா பேசினார்.

இந்தியாவில் ஒரு லட்சம் பேரில், 179 பேர் காசநோயினால் பாதிக்கப்படுகிறார்கள், இதுவே தமிழ்நாட்டை பொறுத்தவரை ஒரு லட்சம் பேருக்கு 125 பேர் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டில், 2024 ஆம் ஆண்டு 93,301 பேருக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவர்களில் 94 சதவீதம் பேருக்கு மருந்து எதிர்ப்புத் திறனுக்கான UDST பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. காசநோயை ஒழிப்பதற்கு அரசாங்கம் பல முன் முயற்சிகளை எடுத்து வருகிறது. காசநோய்க்கான பரிசோதனைகள், மருந்துகள் போன்றவற்றை மக்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், காசநோயை விரைவாக கண்டறிவதற்கு, 127 சிபி நாட் (CBNAAT) மற்றும் 339 ட்ரூநாட் (Truenat) போன்ற பரிசோதனை கருவிகள் நிறுவப்பட்டுள்ளது.

தற்பொழுது வீட்டிற்கே சென்று காசநோய் கண்டறியும் திட்டமான நூறு நாட்கள் நிக்ஷய் சிவிர் "காசநோய் இல்லா தமிழ்நாடு பிரச்சாரம்" என்னும் திட்டம் டிசம்பர் 7 முதல் மார்ச் 24 வரை நடைபெற்றது. இதில் 48 எக்ஸ்ரே வாகனங்கள் மூலமாக மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு சென்று எக்ஸ்ரே பரிசோதனை செய்யப்பட்டு அதில் காசநோய் இருப்பது கண்டறியப்பட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த 100 நாட்கள் பிரச்சாரம் முகாம், மூலம் 77,85,574 பேருக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் 21,788 புதிய காசநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். மருந்து எதிர்ப்பு காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைவதற்கான குறைந்த கால அளவிலான மருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் 24 மாதங்கள் கொடுக்கப்பட்டு வந்த சிகிச்சை, தற்போழுது 6 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் காசநோய் வராமல் தடுப்பதற்காக TPT (காசநோய் தடுப்பு சிகிச்சை) என்னும் 3HP முன் தடுப்பு மாத்திரைகள் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. 2024ல் 73,113 பயனாளிகளுக்கு இச்சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. காசநோயினால் ஏற்படும் இறப்பினை தடுப்பதற்காக தமிழ்நாட்டில் காசநோய் இறப்பில்லா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், 52,625 காசநோயாளிகள் அதன் நோயின் தீவிரத்திற்கு பரிசோதனை செய்யப்பட்டு, 6,217 காசநோயாளிகள் உள்நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. மேலும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடைய ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாதமும் பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்கில் ஆயிரம் ரூபாய் செலுத்தப்படுகிறது. 2024ல் ரூ.31.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. காசநோய் இல்லாத தமிழ்நாடு எனும் இலக்கை அடைவதற்காக, காசநோய் இல்லாத பஞ்சாயத்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 2024 ஆம் ஆண்டு, 1,706 பஞ்சாயத்துகள், காசநோய் இல்லா பஞ்சாயத்துக்காக தேர்வு செய்யப்பட்டது.

ரீச் நிறுவனமானது கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக காசநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, இலவச ஆலோசனை, இலவச பரிசோதனை சேவைகளை வழங்குவதுடன், காசநோயை ஒழிப்பதில் அரசுடன் இணைந்து செம்மையாக செயல்பட்டு வருகிறது, வாழ்த்துக்கள். ரீச் நிறுவனம் மற்றும் இங்கு கூடியிருக்கும் மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காசநோயை ஒழிக்க பாடுபடுவோம். நாம் ஒவ்வொருவரும் உறுதியெடுப்போம், காசநோய் இல்லா தமிழகத்தை உருவாக்குவோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) ஜெயச்சந்திர பானு ரெட்டி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை தலைவர் மரு. சௌமியா சுவாமிநாதன், REACH நிர்வாக செயலாளர் மற்றும் நிறுவனர் மரு.நளினி கிருஷ்ணன், திரைப்பட நடிகை திருமதி சுஹாசினி, பெருநகர சென்னை மாநகராட்சி நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை கூடுதல் இயக்குநர் (காசநோய்) மரு.ஆஷா ஃபிரடெரிக் மற்றும் மருத்துவர்கள், REACH நிர்வாகிகள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றியம் அயமேச்சேரி ஊராட்சியில் .தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார் உடன் ஒன்றிய செயலாளர் பி சேகர். ஆர் கே தேவேந்திரன், ஒன்றிய கழக நிர்வாகிகள். ஜி. சுந்தரமூர்த்தி, ஆர் குப்புசாமி .ஜெயசீலன் ஒன்றியஇளைஞர்அணி நிர்வாகிகள் .வி. குமரன். தியாகராஜன். லோ. ரமேஷ். எஸ் எஸ் கே சத்யா.கார்த்திக் குமார் ஊராட்சி மன்ற தலைவர். ரவி.கிளை செயலாளர் நாகராஜன்.உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

மாணவர்கள் சோர்வாக இருப்பதைப் பார்த்துத்தான்

காலை உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார் முதல்வர்!

பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் விளக்கம்!

சென்னை, மார்ச் 27 -

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நகர்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது அ.தி.மு.க. உறுப்பினர் எஸ்.பி.வேலுமணி காலை உணவுத் திட்டம் பற்றி குறிப்பிட்டார்.

அப்போது அமைச்சர் கீதாஜீவன் குறுக்கிட்டு பேசியதாவது:-

உறுப்பினர் அவர்கள் பேசியபோது, காலை உணவுத் திட்டத்தைப் பற்றிக் கூறினார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவர்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடியபோது, மாணவர்கள் சோர்வாகயிருப்பதை அறிந்துதான் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

எஸ்.பி.வேலுமணிக்கு பதில்: நீங்கள் ஏதோ ஒரு சில இடங்களில் அட்சயப் பாத்திரம் திட்டத்தை செயல்படுத்தியிருக்கலாம். அத்திட்டத்திற்கு அரசு இடத்தைக் கொடுத்தபோதுதான், அதுகுறித்து எதிர்க்கட்சிகளுக்கே தெரிய வந்தது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் முதற்கட்டமாக முதலமைச்சர் அவர்களால் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி 1,545 பள்ளிகளில் பயிலும் சுமார் 1 இலட்சத்து 15 ஆயிரம் மாணாக்கர்களுக்காகத் தொடங்கப்பட்டது.

பிறகு, இத்திட்டத்தின் மூலம் மாணாக்கர்களின் கல்வித் திறன் அதிகரிப்பு, வளர்ச்சி அதிகரிப்பு, ஊட்டச்சத்து உயர்வு உள்ளிட்ட பலன்கள் ஏற்பட்டன என்பதை அறிந்து இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது.

தற்போது, கிராமங்களிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 31,008 பள்ளிகளில் 15 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

முத்தாய்ப்பான இத்திட்டம் முதலமைச்சர் அவர்களுடைய நேரடிக் கண்காணிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால், rural பகுதி மாணவர்களிடையே அத்துணை வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்று திட்டக் கமிஷனுடைய அறிக்கையும் கூறுகிறது. ஆகவே, இத்திட்டம் முழுக்க, முழுக்க முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டதாகும். இத்திட்டம், இந்த ஆண்டு முதல் நகரப் பகுதிகளில் இயங்கி வரும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் விரிவாக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் நேரடியாகக் கண்டறிந்து, கொண்ட வந்த முத்தாய்ப்பான திட்டம் இந்தத் திட்டம் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் குறுக்கிட்டு பேசினார்.

நா.கோதண்டன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் – இரா.லட்சுமணன் முன்னிலை !

40வது வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் ! நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்- நலஉதவிகள் !

இ.பரந்தாமன் சிறப்புரை ! ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி பங்கேற்பு !

சென்னை,மார்ச்.27

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்ட கழக சார்பில் கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் இன்று (27.03.2025 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஏ.இ.கோயில் திடல், புதுவண்ணை, செ81ல் நடைபெறுகிறது.

வட்டகழக செயலாளர் நா.கோதண்டன் தலைமை வகிக்கிறார்.சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், நேதாஜி யு.கணேசன் எம்.சி, என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், குமாரிநாகராஜன் எம்.சி, மா.நாகராஜன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பி ரேம்ஆனந்த், சி.மணிகண்டன், பா.கோதண்டன், கே.முத்தமிழ்செல்வன், என்.பிரேமராசன், எஸ்.கிறிஸ்வதராஜ், பிராங்கிளின், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன்,

எம்.எம்.சாமி, டி.ஆர்.தணிகாசலம், கே.மோகன், ஆர்.சீமான், மு.சா.அரித்குமார், கே.கலா, கே.ஹேமந்த்குமார், டி.,விஜயகுமார், ஆர்.வெங்கட், ஆர்.பத்மநாபன், இந்து ஜி.ராஜேந்திரன், ஜி.பிரேம்குமார், பி.பத்மநாபன், பி.மாலதி, மு.ஆனந்தன், அ.பிரான்சி ஸ்சேவியர், இரா.பாஸ்கர், சி.ஜெ.மோகன், வி.ராஜசேகர், எச்.வீரப்பன், டி.எல்.பி.என்.ரவி, எஸ்.துரை, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகசட்டத்துறை இணைச்செயலாளர் இ.பரந்தாமன் சிறப்புரையாற்று கிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

தா.இளையஅருணா, இரா.மதிவாணன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், க.நாகம்மை, வே.சிவக்குமார், வெ.சு.சத்தியநாராயணன், இர.பொன்இளவரசன், எஸ.பி.எஸ்.புத்தன், ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், எஸ்.கே.இளங்கோவன், வி.வி.ரமேஷ், ஏ.ரமேஷ்பாபு, எஸ்.ஜெ.ராமு, ஜே.ஜே.நெல்சன், ஜே.ஜே.பிராங்கிளின், பி.சதிஷ்குமார், தேவிகதிரேசன் எம்.சி, பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, ஆர்.ரமேஷ், வி.முத்து, பி.அன்பழகன், சா.திருப்ப திசாமி, பி.கே.மூர்த்தி, ஜெ.ரமேஷ்பாபு, மா.ரூபசங்கர், வானூர்.கே.ராஜி, வண்ணைமோகன், நா.செல்வராஜ், பி.ஜெயபால், க.பா.சாமி, எரிமலை பாலு, ஜெ.பி.மாரி, எஸ்.கிருஷ்ணசாமி, டி.மனோகர், எஸ்.நடராஜன், ஏ.இளங்கோவன், ஆர்.கிருஷ்ணன், எம்.பாஸ்கரன், பி.ராஜேந்திரன், ஜெ.ஜெயராஜ், எம்.முரளி, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

எம்.எஸ்.ரவி, எஸ்.எம்.முருகன், என்.டேனியல், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருவாரூர் தொகுதி கொரடாச்சேரி ஒன்றியம்

தேவர்கண்டநல்லூர் கிராம நிர்வாகக் கட்டிடத்தை புதுப்பிக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் - பூண்டி கே.கலைவாணன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 27 -

திருவாரூர் தொகுதி உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் கேட்ட கேள்வியும் அதைத் தொடர்ந்து அமச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அளித்த பதிலும் வருமாறு

திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தேவர்கண்டநல்லூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தேவர்கண்டநல்லூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிப்பது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பூண்டி கே. கலைவாணன்: கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது ஊரக உள்ளாட்சித் துறை வாயிலாகவோ கட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லாத ஒரு சூழல் உள்ளது. எனவே, திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் மாத்திரம் 85 கிராம நிருவாக அலுவலர்கள் வாடகைக் கட்டடத்திலிருந்து தங்களது பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது, குறிப்பாக பெண்களுக்கு முன்னுரிமை வழங்கும் இந்தத் திராவிட மாடல் ஆட்சியில் கழிவறை வசதி இல்லாத அலுவலகக் கட்டடத்தில் பணியாற்றும் பெண் கிராம நிருவாக அலுவலர்கள் மிகவும் அல்லலுறுகிறார்கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன்: தற்போது கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்களைத் தனியாகக் கட்டாமல், ஊராட்சி ஒன்றியத்திலேயே, ஒவ்வொரு கிராமங்களிலும் பஞ்சாயத்து அலுவலகம் கட்டப்படும்போது, அதிலே ஒரு பகுதி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கப்படுகிறது. திருவாரூரைப் பொறுத்தவரையில், மொத்தம் 67 கிராம நிருவாக அலுவலகங்கள் உள்ளன. அவற்றில், 57 கிராம நிருவாக அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன; 10 கிராம நிருவாக அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான வேறு அலுவலகக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட கிராம நிருவாக அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்டுகின்ற பணியையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூண்டி கே. கலைவாணன்: திராவிட மாடல் ஆட்சியில் துவங்கப்பட்ட 'கிராமச் செயலகம்' என்ற திட்டமானது அனைவராலும் போற்றப்படக்கூடிய திட்டமாக இருந்தாலும், ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் அதற்கான போதிய இடம் இல்லாத காரணத்தினால், கிராமச் செயலகம் அமைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன என்பதைத் தங்களின் வாயிலாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் கொண்டு வருகிறேன்.

திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய அத்திகடை ஊராட்சியில், 'நிலுவை இனம்' என்றுள்ள நில வகைப்பாட்டை மாற்றி, காலம் காலமாக 100 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வருபவர்களுக்கு, இன்னும் சொல்லப்போனால், 1 கோடி ரூபாய்க்கும்மேல் மதிப்புள்ள கட்டடங்கள் கூட வீடுகளாக உள்ள நிலையில், சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய மனைப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்றும், நகரப் பகுதிகளிலுள்ள 'சர்க்கார்' என்ற நில வகைப்பாட்டினை மாற்றி, சம்பந்தபட்டவர்களுக்கு பட்டாக்கள் வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன்: வகைப்பாடு மாற்றக்கூடிய அந்த இடமாக இருக்குமென்று சொன்னால், அதை வகைப்பாடு மாற்றித் தருகிறோம். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடங்களைப் பற்றி எனக்கு ஒரு மனுவாக கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கடலூர் சட்டமன்றத் தொகுதி புதுக்கடைப் பகுதியில்

110 கே. வி. துணை மின் நிலையம் விரைந்து அமைத்திடுக!

சட்டப்பேரவையில் கோ.ஐயப்பன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 27 -

பேவையில் கடலூர் தொகுதி உறுப்பினர் கோ. ஐயப்பன் கேட்ட

கேள்வியும், அதற்கு அமைச்சர் செந்தில் பாலாஜி அளித்த பதிலும் வருமாறு:

கோ.ஐயப்பன்: கடலூர் சட்டமன்றத் தொகுதியிலே புதுக்கடை என்ற ஊராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சாரத் துறை மூலமாக நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணம் அந்தத்

இராயபுரம் மற்றும் கல்மண்டபம் பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக 50 வது வட்டத்தில் 60 மின்பகிர்மான பெட்டிகள் உயர்த்தியும் மற்றும் 110KV அளவுள்ள மின்னழுத்தத்தை 130KV மாற்றும் பணியை ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார். உடன் இரா.செந்தில்குமார் . ஆர். சுரேஷ்குமார் ஆர்.வி கணேஷ் அதிகாரிகள் மற்றும் மின்வாரிய பணியாளர்கள் உடன் இருந்தனர்.

துறைக்கு இன்னும் ஒதுக்கப்படாமல் இருப்பதாக அறியப்படுகிறது. நிறைய வீடுகள் புதுச்சேரி பக்கத்திலே இருக்கிறது. இதனால் புதுவை மக்கள் அதிகமாக குடியேறி மின்சாரப் பற்றாக்குறையும் இருந்து வருகிறது. அமைச்சர் அவர்கள் துறைக்குச் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்த ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: கடலூர் சட்டமன்றத் தொகுதி, புதுக்கடை, திருப்பாதிரிபுலியூர் பகுதியில் ஒரு புதியதாக 110KV துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 1.8 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு வகை மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. 18 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அதற்கான பணிகள் இப்போது விரைவில் தொடங்க இருக்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

பொன்னேரி பேருந்து நிலைய அருகில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் ரமேஷ் ராஜ் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, வெள்ளரி, இள நீர், உள்ளிட்ட குளிர்பானங்களை வழங்கினார் உடன் நகர்ச் செயலாளர் ஜி.ரவிக்குமார், சேர்மன் டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், மற்றும் மு.பகலவன், வெ. அன்புவாணன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.